ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 03.08.2017 |

## நாணயக் கொள்கை மீளாய்வு: இல.5 - 2017

நாணயச் சபை 2017 ஓகத்து 2ஆம் நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டிருந்ததுடன் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களை அவற்றின் தற்போதைய மட்டத்தில் பேணுவதெனவும் தீர்மானித்தது.

மேற்குறிப்பிட்ட தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு நாணயச் சபையானது உள்நாட்டு மற்றும் பன்னாட்டு பேரண்ட பொருளாதாரச் சூழல்களின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளையும் நடுத்தர காலத்தில் பணவீக்கத்தினை நடு ஒற்றை இலக்க மட்டத்தில் பேணுவதற்கான தேவையையும் கருத்தில் கொண்டுள்ளது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் 2017 யூலையின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் தற்போதைய இற்றைப்படுத்தலுக்கிணங்க உலக வளர்ச்சிக்கான தோற்றப்பாடு உறுதியடைவதனைக் காண முடிகின்றது. இலங்கையின் பொருளாதாரம் 2017இன் முதற்காலாண்டில் பதிவுசெய்த தாழ்ந்த வளர்ச்சியினைத் தொடர்ந்து அடுத்துவரும் காலாண்டுகளில் மிதமான மீட்சியைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மைத் துறையின் மீட்சி மற்றும் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் சாதகமான செயலாற்றங்கள் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைச் சலுகைகளின் (ஜிஎஸ்பி +) மீள்அறிமுகத்துடன் இணைந்து பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (கொ.நு.வி.சு 2013 = 100) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு 2013 = 100), ஆகிய இரண்டினையும் அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டுக்கு ஆண்டு) 2017 மேயில் பிரதானமாக வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட நிரம்பல்பக்க குழப்பங்களுக்கு மத்தியிலும், அண்மைய மாதங்களில் விரைவான வேகத்தில் மிதமடைந்தது. காலப்பகுதியில் மையப் பணவீக்கத்திலும் இதேபோன்ற போக்கொன்று அவதானிக்கப்பட்டது. 2015 இறுதியிலிருந்து பேணப்பட்டு வந்த நாணயக் கொள்கை நிலை இறுக்கமாக்கலைத் தொடர்ந்தும், அதேபோன்று பணவீக்கத்தின் மீதான ஒரு

நேர விளைவுகளின் தாக்கம் இல்லாமல் போவதனாலும் பணவீக்கமானது 2017 இறுதியை நோக்கி மேலும் வீழ்ச்சியடையுமெனவும் அதன் பின்னர் உறுதியடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும், நாணய விரிவாக்கம் 2017 மேயிலும் அதேபோன்று யூனிலும் உயர்வாகவே தொடர்ந்தும் காணப்பட்டது. நாணய வளர்ச்சி பிரதானமாக உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கத்தினால் தூண்டப்பட்ட அதேவேளையில் வங்கித்தொழில் முறைமையிலிருந்தான தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களும் இவ்வளர்ச்சிக்குச் சாதகமாகப் பங்களித்தன. அதேவேளையில் 2016 காலத்திலும் 2017இன் முதற்பகுதியிலும் உயர் மட்டத்தில் வளர்ச்சியடைந்த தனியார் துறைக்கான கொடுகடன் அண்மைய மாதங்களில் குறைந்த வீதத்திலாயினும் குறைவடைந்து செல்வதற்கான தெளிவான குறிகாட்டிகளை காட்டி நிற்கின்றது. சந்தையில் நிலவுகின்ற உயர்ந்த பெயரளவு மற்றும் உண்மை வட்டி வீதங்களின் பின்னணியில், நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் வளர்ச்சியானது நாட்டின் எஞ்சிய காலப்பகுதியில் மேலும் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அரச பிணையங்களின் விளைவுகளின் அண்மைய வீழ்ச்சியானது ஏனைய சந்தை வட்டி வீதங்களுக்கும் எதிர்வரும் காலத்தில் படிப்படியாக ஊடுகடத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டுத் துறையில், வேளாண்மை ஏற்றுமதிகளினால் வழிநடாத்தப்பட்டு, 2017 மேயில் ஏற்றுமதிச் செயலாற்றம் தொடர்ந்தும் முன்னேற்றமடைந்தது. எனினும், இறக்குமதி மீதான செலவினம் தொடர்ந்தும் அதிகரித்தமையானது மேலும் விரிவுபடுத்தப்பட்ட திரண்ட வர்த்தகப் பற்றாக்குறையொன்றினை விளைவித்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் சுற்றுலாத் துறையிலிருந்தான பெறுகைகள் குறைவான வேகத்தில் 2017 யூனில் குறைவான வேகத்தில் முன்னேற்றமடைந்த அதேவேளை மத்திய கிழக்கில் நிலவுகின்ற பொருளாதார மற்றும் பூகோள அரசியல் நிச்சயமற்றதன்மைகளின் காரணத்தினால் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2017இன் முதல் அரையாண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டன. இருப்பினும், அரச பிணையங்கள் மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை இரண்டையும் உள்ளடக்கிய மூலதனச் சந்தை 2017 மாச்சிலிருந்து வெளிநாட்டு நிதியிடலின் குறிப்பிடத்தக்களவு உட்பாய்ச்சல் ஒன்றினை வெளிப்படுத்துகின்றது. அதேவேளையில், ஐ.அ.டொலர் 167.2 மில்லியனுக்கு வகைகூறிய பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் மூன்றாவது தொகுதியை இலங்கை பெற்றுக் கொண்டது. இத்தகைய அபிவிருத்திகளைப் பிரதிபலித்து, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2017 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 6.7 பில்லியனாகக் காணப்பட்டது. மீள்புதுப்பிக்கப்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களினால் வெளிநாட்டுத் துறையின் தோற்றப்பாடானது மேலும் வலுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, இலங்கை ரூபா 2017 யூலை இறுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 2.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

மேற்குறிப்பிட்டவற்றினைக் கருத்தில் கொண்டு, நாணயச் சபை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் அவற்றின் தற்போதைய மட்டங்களான முறையே 7.25 சதவீதத்திலும் 8.75 சதவீதத்திலும் பேணுவதெனத் தீர்மானித்தது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் மாற்றப்படவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.75% |

| | |
|---|---|
| நியதி ஒதுக்கு விகிதம் | 7.50% |

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2017 செத்தெம்பர் 26 ஆம் நாள் வெளியிடப்படும்.

**தரவு இணைப்பு:**

## அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | திசெ-16 | மாச்-17 | ஏப்-17 | மே-17 | யூன்-17 | யூலை-17 |
|---|---|---|---|---|---|---|---|
| **முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு (2013=100) | 4.5 | 7.3 | 6.9 | 6.0 | 6.1 | 4.8 |
| | தேநுவிசு (2013=100) | 4.2 | 8.6 | 8.4 | 7.1 | 6.3 | - |
| **மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு (2013=100) | 5.8 | 7.3 | 6.8 | 5.2 | 5.1 | 4.9 |
| | தேநுவிசு (2013=100) | 6.7 | 7.0 | 5.9 | 4.7 | 4.1 | - |

மூலம்: *தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 02: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ. பில்லியன்) | | | | | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திசெ 16 | மாச் 17 | ஏப் 17 | மே 17 | யூன் 17 | திசெ 16 | மாச் 17 | ஏப் 17 | மே 17 | யூன் 17 |
| ஒதுக்குப் பணம் | 856 | 892 | 886 | 860 | 892 | 27.1 | 12.7 | 16.0 | 17.3 | 17.8 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 5,406 | 5,677 | 5,731 | 5,803 | 5,873 | 18.4 | 20.0 | 20.1 | 21.4 | 21.2 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | -231 | -371 | -341 | -319 | -246 | 22.4 | 15.6 | 26.6 | 31.9 | 50.0 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 5,637 | 6,049 | 6,072 | 6,122 | 6,119 | 15.9 | 17.0 | 16.0 | 16.6 | 14.7 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 1,972 | 2,215 | 2,206 | 2,240 | 2,235 | 12.1 | 13.3 | 12.6 | 13.9 | 11.4 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 495 | 553 | 557 | 562 | 551 | -5.3 | 7.5 | 9.0 | 14.7 | 13.7 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 4,204 | 4,375 | 4,394 | 4,425 | 4,505 | 21.9 | 20.4 | 20.0 | 18.9 | 18.6 |
| விரிந்த பணம் ($M_4$) | 6,630 | 6,951 | 7,033 | 7,131 | 7,221 | 15.9 | 18.2 | 18.4 | 19.8 | 20.3 |

மூலம்: *இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | திசெ 16 முடிவில் | மாச் 17 முடிவில் | ஏப் 17 முடிவில் | மே 17 முடிவில் | யூன் 17 முடிவில் | யூலை 17 முடிவில் | 02 ஓகத் 17 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.00 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.50 | 8.75 | 8.75 | 8.75 | 8.75 | 8.75 | 8.75 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 8.42 | 8.75 | 8.72 | 8.72 | 8.75 | 8.75 | 8.72 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 8.72 | 9.63 | 9.73 | 9.61 | 9.60 | 9.44 | 9.03 |
| 182-நாள் | 9.63 | 10.62 | 10.70 | 10.35 | 10.29 | 9.71 | 9.16 |
| 364-நாள் | 10.17 | 10.98 | 11.02 | 10.71 | 10.47 | 9.99 | 9.48 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 11.52 | 11.79 | 11.78 | 11.40 | 11.70 | 12.26 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 13.20 | 13.40 | 13.52 | 13.57 | 13.73 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.37 | 14.54 | 15.00 | 14.81 | 14.90 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 8.17 | 8.81 | 8.89 | 8.99 | 9.13 | 9.19 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 10.46 | 11.38 | 11.43 | 11.52 | 11.66 | 11.78 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 11.17 | 11.49 | 11.38 | 11.68 | 11.57 | - | - |

மூலம்: *இலங்கை மத்திய வங்கி*